# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2021ஆம் ஆண்டு ஜுலை மாதம் 16 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 16.07. 2021 | 1) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந6) அரசாணை எண் (டி) எண்.6 நாள் 23.01.2018ல் படி தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணியினை உலக வங்கி நிதி ஆதாரத்துடன் கடன், மான்யம் மற்றும் உள்ளாட்சி பங்கு தொகையுடன் முதல் கட்டமாக 6 சிப்பங்களாக பணிகளை செயல்படுத்த ரூ. 96.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கண்ட 6 சிப்பம் பணிகளில் சிப்பம் 1 மற்றும் 5க்கான பணிகள் தேசிய நெடுஞ்சாலை பகுதியான NH45B மற்றும் NH7A ஆகியவற்றில் வருவதால் அப்பகுதியில் மழைநீர் வடிகால் அமைப்பதற்கான கூடுதல் செலவினத்தை சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு திருத்திய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு. | 51)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண். | நிதி ஆதாரம் | ஒதுக்கீடு நிதி | திருத்திய நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| 1 | கடன் தொகை (தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி) (TNUDF) உலக வங்கி நிதியுதவியுடன் (TNUSDP) | 9.61 | 9.61 |
| 2 | மான்யம் ( Project sustainability Grant Fund -PSGF உலக வங்கி நிதியுதவியுடன் (TNSUDP) | 76.90 | 76.90 |
| 3 | மாநகராட்சி பங்கு தொகை | 9.61 | 9.61 |
| 4 | சீர்மிகு நகர திட்ட நிதி | | 79.56 |
| | **மொத்தம்** | 96.12 | 175.68 |

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் 6 சிப்பங்களாக மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மான்யத் தொகை ரூ.76.90 கோடியில் (TNSUDP) இதுவரை ரூ. 13.56 கோடி மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி மான்யத் தொகை பெறுவதற்கான கால அளவு 12.07.2021ல் முடிவடைந்துள்ளதாக தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்தின் மின்னஞ்சல் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி திட்டத்திற்கான மான்யத் தொகை முழுவதும் பெறப்படாமல் உள்ளபடியால் மான்ய தொகை பெறுவதற்கான கால அளவிலான நீட்டிப்பு செய்யப்பட வேண்டியுள்ளது.

தற்போது மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளில் 60 சதவீத பணிகள் முடிவு பெற்றுள்ளது. மேற்படி மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் 2020ம் வருடம் ஏப்ரல் மாதம் கோரோனா நோய் தொற்று ஏற்பட்டு நாடு

| | | |
|---|---|---|
| | முழுவதும் ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்டது காரணமாகவும் கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்த மழையின் காரணமாக மாநகர பகுதியில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாகவும், உரிய காலத்திற்குள் பணிகளை முடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக மான்யம் அனுமதிக்கப்பட்ட காலஅளவில் பணிகள் முடித்து மான்ய தொகை கோர இயலவில்லை.<br>தற்போது மேற்கண்ட திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வரும் நிலையில் மேற்கண்ட பணிக்கு மான்ய தொகை பெறுவதற்கான கால அளவினை 31.03.2022 வரை நீட்டிப்பு செய்து தரக்கோரி மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** மாமன்றம் அனுமதிக்கலாம். இ1/9047/2014 | |
| | 2) இம்மாநகராட்சி வல்லநாடு தலைமை நீரேற்று நிலையம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் ஆகியவற்றின் குடிநீர் விநியோக இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு மாநகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் மேற்படி பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் மேற்கொள்வதில் நிர்வாக இடர்பாடுகள் ஏற்பட்டு வருகிறது. ஆகையால் மேற்படி குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்படி பணிக்கு அமர்த்தப்படும் பணியாளர்களான Electrician pump operator, Lab attender, Technical Helper. Turn cock, Line Man skilled fitter ஆகிய நிலையில் மொத்தம் 57 மனித ஆற்றல்கள் நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் மூலம் ஈடுபடுத்தவும் இப்பணியாளர்களுக்கு அனுமதிக்கப்பட்ட தினக்கூலி (PWD SOR/District Collector Approval Rate) ஊதிய விகிதத்தில் 01.04.2021 முதல் ஓர் ஆண்டிற்கு தற்காலிக அடிப்படையில் பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ளவும் ஓராண்டு காலத்திற்கு இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 110.00 இலட்சத்தினை மாநகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2) மேற்படி பணியாளர்களுக்கு ஏப்ரல், மே 2021 மாத ஊதியம் ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்கியதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 3874/18/இ2/ (CLC) | 52)அலுவலகக் குறிப்பு 1 ஒப்புதல் வழங்கப்பட்டது அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக் கப்பட்டது. |
| | 3)தூத்துக்குடி மாநகராட்சி மைய அலுவலகம், கிழக்கு மேற்கு. வடக்கு தெற்கு மண்டலங்களில் நடைபெறும் அலுவலக பணிகள் முற்றிலும் கணினி மயமாகிவிட்டதால் வருவாய் மற்றும் குடிநீர் பணிகளான (கேட்பு எழுப்புதல்) மேற்கொள்ளவும் பொறியியல் பிரிவு பணிக்கான மதிப்பீடு தயாரிப்பது மற்றும் சொத்து வரி பொது சீராய்வு பணி கணினியில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைந்து முடிக்கவும் கணினி இயக்குபவர்கள் (Data Entry Operator) மொத்தம் 10 நபர்களை நகர்ப்புற வாழ்வாதார மையம் (City Livehood centre) மூலம் | 53)அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். K3/9128/2020 நாள் 09.09.2020ல் 2020–2021ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் நாள் ஒன்றுக்கு ரூ. 519 வழங்குவதற்காகவும்<br>மேலும் இவர்களது அனுமதி காலம் 30.06.2021ம் தேதியுடன் முடிவடைவதால் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியதன் அத்தியாவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி 01..07.2021 முதல் 31.03.2022 முடிய காலத்திறகு, மேற்படி 14 நபர்களை நகர்புற வாழ்வாதார மையம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் ந.க.எண். K3/9128/2020 நாள் 09.09.2020ல் 2020–2021ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் ஆகும் தோராய செலவினம் ரூ 25.59 லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்.இ5/0186/17–18 | |
| | 4)தூத்துக்குடி மாநகராட்சி கிழக்கு, மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு மண்டலங்களில் நடைபெறும் சீர்மிகு நகர அபிவிருத்தி திட்டங்கள் மற்றும் பல்வேறு திட்டப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் மேற்படி பணிகளை பார்வையிடவும், பணியினை அளவீடு செய்து. செலவின பட்டியல் தயார் செய்ய இளநிலை பொறியாளர்களுக்கு ஒவ்வொரு நிலையிலும் உதவிட ஏதுவாக 14 நபர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களாக, தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் 2019–2020ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட பட்டியலின் படி, தினக்கூலி அடிப்படையில் தொழில்நுட்ப உதவியாளரை நகர்புற வாழ்வாதார மையம் (City Livehood centre) மூலம் பெற்று பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>இவர்களது அனுமதி காலம் 30.06.2021ம் தேதியுடன் முடிவடைவதால் பணிகள் தொய்வின்றி மேற்கொள்ள வேண்டியதன் அத்தியாவசியம் மற்றும் நிர்வாக நலன் கருதி 01.07.2021 முதல் 31.03.2022 முடிய காலத்திற்கு, மேற்படி 14நபர்களை நகர்புற வாழ்வாதாரமையம் மூலம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.எண். K3/9128/2020 நாள் 09.09.2020ல் 2020–2021ம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விலை விகிதத்தின் அடிப்படையில் ஆகும் தோராய செலவினம் ரூ. 25.59 லட்சத்திற்கும் மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். இ5/0186/17–18 | 54)அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |
| | 5)கொரோனா தொற்று நோய் தீவிரமாக பரவி வருவதனை தடுக்கும் பொருட்டு அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் அனைத்து விதமான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மாநகராட்சி பகுதிகளில் கொரோனா தொற்று நோய் பரவலை தடுக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படும் நடவடிகைகளை தீவிரப்படுத்தவும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரியும் மருத்துவ அலுவலர்களுக்கு தொற்று ஏற்படுதல் மற்றும் தவிர்க்க முடியாத காரணங்களுக்கு விடுமுறையில் செல்லும் | 55) அலுவலகக் குறிப்பு அனுமதிக் கப்பட்டது. |

போது பணிகளில் தொய்வு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கோவிட் 19 கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களின் வீடுகளுக்கு சென்று கண்காணித்தல் மற்றும் தொடர் சிகிச்சை அளித்தல் போன்ற களப்பணிகளை மேற்கொள்ளவும் மருத்துவ பணிகளில் உதவி புரிய 10.05.2021 முதல் 31.07.2021 வரை தற்காலிகமாக இரண்டு மருத்துவர்கள் (2 ஆயுஸ் AYSUH மருத்துவர் ) பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்படி பணிக்காக 06.07.2021ம் தேதிய 50ஆம் எண் மாமன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் கொரோனா தடுப்பு பணிகள் எவ்வித தடையுமின்றி நடைபெற ஏதுவாகவும் எதிர்வரும் காலங்களில் மேற்படி நோயின் தீவிர தாக்கமான 3வது அலையின் தொடர்ச்சியாக எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகளை கையாளுவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான மருத்துவ பணிகளில் உதவி புரிய தற்காலிகமாக இரண்டு மருத்தவர்கள் ( 2 ஆயுஸ் AYSUH மருத்துவர்) 01.08.2021 முதல் 31.12.2021 வரை நான்கு மாதம் நியமனம் செய்து கொள்வதற்கும், அதற்கான ஊதியம் (மாதம் 30,000/–) கோவிட் / மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

01.08.2021 முதல் 31.12.2021 வரையிலான காலத்திற்கு பணியமர்த்திக்கொள்வதற்கும் அதற்காகும் செலவினம் ரூ. 2,40,000/– க்கு கோவிட் / மாநகராட்சி நிதியிலிருந்து வழங்குவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். எச்1/2021/2021

தூத்துக்குடி மாநகராட்சி
நாள் 1 6.07.2021

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி